# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2009 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, விதுரர்களினதும் அநாதைகளினதும் ஓய்வூதியத் திட்டம் (ஆயுதந்தாங்கிய படைகள்) (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2009, மே மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, விதுரர்களினதும் அநாதைகளினதும் ஒய்வூதியத் திட்டம் (ஆயுதந்தாங்கிய படைகள்) (திருத்தச்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 56/2007

**1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, விதுரர்களினதும் அநாதைகளினதும் ஒய்வூதியத் திட்டம் (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, விதுரர்களினதும் அநாதைகளினதும் ஒய்வூதியத் திட்டம் (ஆயுதந்தாங்கிய படைகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்கச் சட்டத்தில் 4அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, விதுரர்களினதும் அநாதைகளினதும் ஒய்வூதியத் திட்டம் (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டம் அதன் 4 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

*"3 ஆம், 4 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்கு "ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினரொருவர்" என்பதன் பொருள்.*

4அ. இச்சட்டத்தின் 3 ஆம், 4 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்கு, "ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர்" என்பது, -

(அ) அவர் ஒரு பெண்ணாக இருக்கையில் இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படைப்பிரிவின் அலுவலர் அல்லது படைவீரர் ஒருவர் ; அல்லது

(ஆ) அவர் ஒரு பெண்ணாக இருக்கையில் விடயத்திற்கேற்ப, இலங்கை அரச கடற் படையின் அல்லது இலங்கைக் கடற் படையின் நிரந்தர கடற்படைப் பிரிவின் அலுவலர் அல்லது கடலோடி ஒருவர் ; அல்லது

(இ) அவர் ஒரு பெண்ணாக இருக்கையில் விடயத்திற்கேற்ப, இலங்கை அரச வான் படையின் அல்லது இலங்கை வான்படையின் நிரந்தர வான்படைப் பிரிவின் அலுவலர் அல்லது வான்படை வீரர் ஒருவர்,

எனப் பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 4ஆ, 4இ, 4ஈ, 4உ அத்துடன் 4ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் பிரிவுகள் 4ஆ, 4இ, 4ஈ, 4உ அத்துடன் 4ஊ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

“ஆயுதங் தாங்கிய படைகளின் நிரந்தர, ஒதுக்குத் தொண்டர் படைப்பிரிவின் அல்லது தொண்டர் ஒதுக்குப் படைப்பிரிவின் உறுப்பினர் களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை விரிவாக்கல்.

4ஆ. (1) ஆயுதந்தாங்கிய படைகளின் தொண்டர் படைப்பிரிவின் உறுப்பினரொருவராக வந்துள்ள வரும் இப்பிரிவு நடைமுறைக்கு வருவதற்கு முன்னரான ஒரு தேதியன்று ஓய்வூதிய நலன்களுடன் ஓய்வு பெற்றிருந்தவருமான அல்லது அத்தகைய தேதியன்று அத்தகைய படைப்பிரிவில் தொடர்ந்திருக்கின்றவருமான ஆளெவரும், அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் நியமிக்கப்பட்ட அத்தகைய தேதிக்கு முன்னர் அதன்பொருட்டு விண்ணப்பமொன்றைச் செய்வதன்மீது ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகை செலுத்துநர் ஒருவராவதற்குத் தெரிவு செய்யலாம்.

(2) விடயத்திற்கேற்ப, ஆயுதந்தாங்கிய படைகளின் நிரந்தரப் படைப்பிரிவிலிருந்து அல்லது தொண்டர் படைப்பிரிவிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அல்லது விடுவிக்கப்பட்ட பின்னர் இப்பிரிவின் ஏற்பாடுகள் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர் விடயத்திற்கேற்ப, ஆயுதந்தாங்கிய படைகளின் நிரந்தர ஒதுக்குப் படைப்பிரிவுக்கு அல்லது தொண்டர் ஒதுக்குப் படைப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளவரும் அத்தகைய தேதியன்று அத்தகைய ஒதுக்குப் படையில் அத்தகைய உறுப்பினரொருவராக ஓய்வூதிய நலன்களுடன் இளைப்பாறியுள்ளவரும் அல்லது தொடர்ந்திருக்கின்றவருமான ஆளெவரும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய

தேதிக்கு முன்னர் அதன் பொருட்டு விண்ணப்ப மொன்றைச் செய்தவன்மூலம் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருப்பதற்குத் தெரிவு செய்யலாம்.

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சொல்லப்பட்ட உட்பிரிவுக ளில் குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் விதித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் (1) ஆம் உட்பிரிவின் கீழேயோ, (2) ஆம் உட்பிரிவின் கீழேயோ தெரிவொன்றைச் செய்யாமல் இறக்கு மிடத்து, ஒரு கணவரை அல்லது பிள்ளையை அல்லது ஒரு கணவரையும் ஒரு பிள்ளையையும் அல்லது ஒரு கணவரையும் பிள்ளைகளையும் விட்டுச் செல்வாராயின் அவர் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருப்பதற்குத் தெரிவு செய்துள்ளதாகக் கருதப்படு தல் வேண்டும்.

(4) உதவுதொகை செலுத்துநர் ஒருவராக வருவ தற்குத் தெரிவு செய்துள்ள ஆளெவரும் அல்லது ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்து நர்களாக வருவதற்குத் தெரிவு செய்துள்ளவர் களாகக் கருதப்படும் ஆட்களின் விடயத்தில் அத்தகைய இறப்புற்ற ஆளின் அலுவல்களை நிர்வகிக்கும் ஆள், தோதான ஆயுதந்தாங்கிய படைக்கு அத்தகைய ஆள் அணிதிரட்டப்பட்ட தேதியன்று தொடங்கி விடயத்திற்கேற்ப தெரிவு செய்த, ஓய்வுபெற்ற அல்லது இறந்த தேதிவரையி லான காலப்பகுதிக்கு உதவுதொகைகளின் எல்லா நிலுவைகளையும் அவற்றின்மீது ஆண்டொன் றுக்கு நான்கு சத வீதப்படி வட்டியுடன் சேர்த்து காலஞ்சென்ற ஓய்வூதியத் திட்டத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

(5) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் தெரிவு இறுதியானதாதல் வேண்டும்.

இப்பிரிவு நடைமுறைக்கு வந்ததன்பின் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பின ரொருவராக வரும் ஆளொருவர் உதவுதொகை செலுத்துநர் ஒருவராதல்.

4இ. இப்பிரிவின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆயுதந்தாங்கிய படைகளின் நிரந்தர ஒதுக்குப் படைப்பிரிவின் அல்லது தொண்டர் படைப்பிரி வின் அல்லது தொண்டர் ஒதுக்குப் படைப்பிரிவின் உறுப்பினரொருவராகவரும் ஆளெவரும் அத்த கைய தேதியிலிருந்தும் அதன் பின்னரும் ஓய்வூதி யத் திட்டத்திற்கு உதவு தொகை செலுத்துநர் ஒருவராதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான ஓய்வூதியத் திட்டத்தைத் தவிர்ந்த வேறு ஓய்வூதியத் திட்டங்களுக்கு உரித்து டைத்தாதல்.

4ஈ. ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர் ஒன்றில் ஆயுதந்தாங்கிய படைகளில் சேரு முன்னர் அன்றேல் ஆயுதந்தாங்கிய படைகளை விட்டு விலகியபின்னர் பகிரங்க சேவையில் ஏதேனும் பதவியில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள விடத்தும் அத்துடன் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராக அவரது ஓய்வூதியத்திற்கு மேலதிகமாக அத்தகைய தொழிலின் பயனைக் கொண்டு ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையவ ராக இருக்குமிடத்தும் அவர் இறக்கும்பட்சத்தில் அவரது விதுரரும் அநாதைகளும் ஒன்றில் –

(அ) அவர் ஆயுதந்தாங்கிய படைகளுடன் முழு சேவைக் காலப்பகுதியும் சேவையாற்றி யிருந்திருப்பின் அவர் பெற்றிருக்கக்கூடிய ஓய்வூதியங்களின் கூட்டுமொத்தத்தை விஞ்சாதிருக்க வேண்டியதான அத்தகைய தொகையை ; அல்லது

(ஆ) அவர் பகிரங்க சேவையில் முழு சேவைக் காலப்பகுதியும் சேவையாற்றியிருந்திருப் பின் அவர் பெற்றிருக்கக்கூடிய ஓய்வூதியங் களின் கூட்டு மொத்தத்தை விஞ்சாதிருக்க வேண்டியதான அத்தகைய தொகையை,

ஓய்வூதியமொன்றாகப் பெறுவதற்கு உரித்துடைய வராதல் வேண்டும்.

*செயற்பாட்டுக் கடமைகளை ஆற்றுகையில் ஏற்பட்ட காயங்களால் ஊனமுற்ற வரான ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினருக்கு ஓய்வூதியத் திட்டத்தை விரிவாக்கல்.*

*4உ. (1) செயற்பாட்டுக் கடமைகளை அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் வேறு எவையேனும் கடமைகளை நிறைவேற்றுகையில் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளின் விளைவொன்றாக ஏற்பட்ட காயங்களின் காரணமாக ஊனமுற்றவரும் இராணுவ சேவைக்குப் பொருத்தமற்றவர் என விடயத்திற்கேற்ப, இலங்கைத் தரைப்படையின், இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை வான் படையின் மருத்துவச் சபையால் தீர்மானிக்கப்பட்டவரும் அவர் ஐம்பத்தைந்து வயதை அடையும் வரை சம்பளத்தையும் படியையும் பெறுகின்ற வருமான,–*

*(அ) இலங்கைத் தரைப்படையில் நிரந்தரப் படைப்பிரிவின், நிரந்தர ஒதுக்குப் படைப்பிரிவின் தொண்டர் படைப் பிரிவின் அல்லது தொண்டர் ஒதுக்குப் படைப்பிரிவின் எவரேனும் பெண் அலுவலர் அல்லது பெண் படைவீரர் ; அல்லது*

*(ஆ) இலங்கை கடற்படையின் நிரந்தரப் படைப்பிரிவின், நிரந்தர ஒதுக்குப் படைப்பிரிவின் அல்லது தொண்டர் படைப் பிரிவின் அல்லது தொண்டர் ஒதுக்குப் படைப்பிரிவின் எவரேனும் பெண் அலுவலர் அல்லது பெண் கடலோடி ; அல்லது*

*(இ) இலங்கை வான்படையின் நிரந்தரப் படைப்பிரிவின், நிரந்தர ஒதுக்குப் படைப்பிரிவின், தொண்டர் படைப் பிரிவின் அல்லது தொண்டர் ஒதுக்குப் படைப்பிரிவின் எவரேனும் பெண் அலுவலர் அல்லது பெண் வான்படை வீராங்கனை,*

வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதிக்கு முன்னர் அதன் பொருட்டு விண்ணப்பமொன்றைச் செய்வதன் மூலம் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருப்பதற்குத் தெரிவு செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஆளொருவர் அவ்வுட்பிரிவின்கீழ் தெரிவொன்றைச் செய்யாமல் விதித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் இறக்குமிடத்து அவர் ஒரு வாழ்க்கைத் துணையை அல்லது ஒரு பிள்ளையை அல்லது ஒரு வாழ்க்கைத் துணையையும் பிள்ளையையும் அல்லது ஒரு வாழ்க்கைத் துணையையும் பிள்ளைகளையும் விட்டுச் செல்வாராயின் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராகத் தெரிவு செய்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) பிரிவு 4ஆ என்பதன் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் இப்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவருக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பொருள் கோடல்.

4ஊ. பிரிவுகள் 4ஆ, 4இ மற்றும் 4ஈ என்பவற்றின் நோக்கங்களுக்கு ஆயுதங்தாங்கிய படைகளின் "நிரந்தர ஒதுக்குப் படைப்பிரிவின், தொண்டர் படைப்பிரிவின் அல்லது தொண்டர் ஒதுக்குப் படைப்பிரிவின் உறுப்பினர் ஒருவர் –

(அ) விடயத்திற்கேற்ப, இலங்கைத் தரைப்படை தொடர்பில் இராணுவச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் நிரந்தரப் படைப்பிரிவின் பெண் அலுவலர் அல்லது பெண் படைவீரர் ஒருவராக் கருதப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) இலங்கைக் கடற்படை தொடர்பில் கடற்படைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் விடயத்திற்கேற்ப நிரந்தரக் கடற்படை படைப்பிரிவின் பெண் அலுவலர் அல்லது பெண் கடலோடி ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும் ; அல்லது

(இ) இலங்கை வான்படை தொடர்பில் வான்படைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் விடயத்திற்கேற்ப நிரந்தர வான்படைப் பிரிவின் பெண் அலுவலர் அல்லது பெண் வான்படை வீராங்கனை ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும் .".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*